# அறநெறிக்கால இலக்கியங்கள் காட்டும் விருந்தோம்பற் பண்பு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

விருந்தோம்பற் பண்பு பண்டுதொட்டுத் தமிழர்களிடத்தில் இருந்து வந்துள்ளது. தமிழ்மொழியில் எழுந்த தொன்மையான இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் விருந்தோம்பல் பற்றிய பல தகவல்களைத் தருகின்றன. குறிப்பாக, ஆற்றுப்படை இலக்கியங்களிலே விருந்தோம்பலின் தேவையும், சிறப்பும் பலவாறு விதந்துரைக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

இங்ஙனம் தமிழர் பண்பாட்டு மரபுகளுள் ஒன்றாக விளங்கிய விருந்தோம்பல் பற்றி அறநெறிக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மேலும் அழுத்தமாகப் பேசியுள்ளன. வீட்டுக்கு வரும் விருந்தினரை வரவேற்றுக் கௌரவிக்கும் விரும்தோம்பலை மட்டுமன்றி 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' வாழ்வியலையும் அவை விருந்தோம்பல் என்றே குறிப்பிடுவதைக் காணலாம். பசிப்பிணி தீர்த்து உயிர்களை வாழவைக்கும் இந்த அறம் தனிமனித நிலை, குடும்பநிலை, சமூகநிலை எனும் தளங்களில் எங்ஙனம் பின்பற்றப்பட வேண்டும் என்ற வழிகாட்டல்களை அவை தருகின்றன. தனிமனித நிலையில் விருந்தோம்பல் ஆத்ம திருப்தியைத் தரும் ஒரு வாயிலாகவும், இல்லற நிலையில் ஒரு வாழ்வியல் கடமையாகவும், சமூகநிலையில் பசிப்பிணியைத் தீர்க்கும் ஒரு பேரறமாகவும் இலக்கியங்களிலே பேசப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் உயிர்களுக்கு

இம்மையிலும் மறுமையிலும் பயன்களைத் தரவல்ல ஒப்பற்ற அறமாக விருந்தோம்பல் விதந்துரைக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

ஆய்வுக்காலப் பகுதியில் தோன்றிய திருக்குறள் உள்ளிட்ட அறநூல்களிலும், காவியங்களிலும் விருந்தோம்பல் பற்றிய குறிப்புகள் தாராளமாகத் தரப்பட்டுள்ளன. விருந்தோம்பலின் சிறப்பு, விருந்தினரின் தன்மை, விருந்தோம்பலால் கிடைக்கக் கூடிய இம்மை மறுமைப் பயன்கள், விருந்தை அவமதித்தலால் ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகள், வறுமைக்கு விருந்தோம்பல் மருந்தாக அமையும் மாண்பு, அறங்களுக்குள் அது பெற்றுள்ள முதன்மை முதலான பல விடயங்கள் குறித்து அவை பேசுகின்றன. அறநெறிக்காலப் பகுதியில் விருந்தோம்பற் பண்பாட்டுக்கு கிடைத்த மேலான மதிப்பும், கவனிப்பும் இத்தகைய தகவல்கள் மூலம் தெரியவருகின்றன.

விருந்தோம்பற் பண்பாடு பற்றி இதுவரை திருக்குறளை மையப்படுத்தியே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவ்வாறன்றி அறநெறிக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் யாவற்றையும் தொகுத்தாராய்ந்து அவை சுட்டும் விருந்தோம்பற் பண்பாடு பற்றிய குறிப்புக்களை இக் கட்டுரை முன்வைக்க முயல்கின்றது.

**விருந்தும் விருந்தினரும்**

இல்லற நிலையில் பின்பற்றப்பட வேண்டிய உயர்ந்த அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலை அறநெறிக்கால இலக்கியங்கள் சுட்டுகின்றன. திருவள்ளுவனார், இல்வாழ்வான் என்பான் பிதிரர்கள், தேவர்கள், விருந்தினர்கள், சுற்றத்தார், தான் என்று சொல்லப்படுகின்ற ஐந்திறத்தாரையும் ஓம்புதல் கடன் எனக் குறிப்பிடுகின்றார் (குறள்: 43). இவ் ஐவருள்ளும் விருந்தினரை ஓம்பலே மிகச் சிறந்த அறம் எனப் பரிமேலழகர் சுட்டுதல் நோக்கத்தக்கதாகும்.

> *“தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனாகாதாரை நினைத்து செய்வனவாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று”*

என்கிறார். எப்பயனும் நோக்காது யாவர்மாட்டும் செய்யப்படுவது விருந்தோம்பல் மட்டுமே ஆதலால் இல்லற அறங்களுள் எல்லாம் தலையானதாக பரிமேலழகர் அதைச் சுட்டுகின்றார். இதனையே மற்றுமோர் குறளில் வள்ளுவர்,

*இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு* (குறள்: 81)

எனக் கூறியிருந்தல் நோக்கற்பாலதாகும். 'விருந்து' என்பதற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் தருகின்றார்.

> *"விருந் தென்பது புதுமை; அஃது ஈண்டாகுபெயராய்ப் புதியராய் வந்தார் மேனின்றது; அவர் இருவகையர்; பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும்; அஃதின்மையிற் குறியாது வந்தாருமென."*

மேலே தரப்பட்டுள்ள உரைப்பகுதியில் விருந்தினர்களை இருவேறு வகையினராகப் பரிமேலழகர் அடையாளங் கண்டுள்ளார்.

i. விருந்து நல்குவோருக்கு ஏலவே நன்கு பரிசயமானவர் ஒருசாரார்.
ii. மற்றையோர் விருந்து நல்குவோருக்கு முன்னம் ஒருபொழுதும் பரிசயமில்லாதார்.

முதலாவது வகைமையுள் ஒருவருக்கு நன்கு முகப் பழக்கம் உடையவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் என்போர் அடங்குவர். இவர்கள் – உறவினர்கள் போலல்லாது எதிர்பார்த்தோ அல்லது எதிர்பாராமலோ வீட்டுக்கு வருபவர்கள். இவர்கள் போலல்லாது எதிர்பாராது வரும் முன்பின் முகமறியா நபர்களும் உளர். இவர்களை இரண்டாவது வகை விருந்தினர்களாகக் காண்கின்றார் பரிமேலழகர். ஏலாதியின் எட்டுப் பாடல்களில் இல்லறத்தான் ஒருவன் விருந்து தந்து காப்பாற்ற வேண்டிய இரண்டாவது வகை விருந்தினர்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அந்தணர், பசித்தவர், தவசிகள், குழந்தைகள், பிறரால் வெறுக்கப்படுகின்றவர்கள், தம்மைக் காத்துக்கொள்ளுதற்குரிய ஆதாரம் இல்லாதோர் (ஏலாதி: 54),

முன்வினைப்பயனாக மேல் நிலையிலிருந்து இழிந்தோர் (வீட்டை இழந்தோர், வாணிகத்தில் செல்வத்தை இழந்தோர், விளைந்த நெல்லை இழந்தோர், பசுக் கூட்டத்தை இழந்தோர்) ஊனமுற்றோர் (குருடர், முடவர், ஊமைகள்), வயது மூத்தோர், அநாதைகள், கடன்பட்டோர், வறியோர் (ஏலாதி: 52, 53) , பெண்கள், மகவினைப் பெற்றோர், மகவினைப் பெறுங் காலத்தில் வேதனைப் படுகின்றவர்கள், கருவுற்றிருக்கின்றவர்கள், கைம்பெண்கள் (ஏலாதி: 55, 78), நோயால் வருந்துகின்றவர்கள், உடம்பில் புண்பட்டோர், பித்தர்கள் (அறிவு மயங்கியவர்கள்), சிறைவாசம் அனுபவித்தோர் (ஏலாதி: 56, 57, 79) என்போர்களே ஏலாதி சுட்டும் இரண்டாவது வகை விருந்தினர்களாவர். இவர்களுக்கு உணவும், ஆதரவும், பொருளும் தந்து பேணுவதால் இல்லறத்தான் ஒருவன் பெருஞ் சிறப்பும், புகழும், நல்வாழ்வும் இவ்வுலகில் வாய்க்கப் பெறுவான் என்று ஏலாதி வலியுறுத்துகின்றது.

**விருந்தோம்பலும் அறநூல்களும்**

ஏலாதியில் தரப்பட்ட மேற்போந்த விபரிப்பினையும் ஏனைய அறநூல்களில் தரப்படுகின்ற விருந்தோம்பல் பற்றிய குறிப்புக்களையும் நோக்குகின்றபோது ஆதரவு தேடித் தம்மை நாடி வந்தோருக்குச் செய்யும் விருந்தோம்பல் பற்றியே அறநூல்கள் விரிவாகப் பேசியுள்ளமை தெரிகின்றது. இதுவே ஈகை என்னும் பேரறமாக உருப்பெற்றுள்ளதைக் காணலாம். தன்னை நாடிவந்தாரின் உயிரையும், உடலையும், மானத்தையும் காப்பாற்றும் பெரும் தொண்டாக இவ் விருந்தோம்பல் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனிதசமுதாயம் இனக்குழுக்களாக இருந்த காலங்களில் அதாவது பொதுமைச் சமுதாயமாக இருந்தபோது ஆதரவுதேடி அலையும் நிலையிருக்கவில்ல. ஆனால் என்று அது உடைமைச் சமுதாயமாக மாற்றம் கண்டதோ அன்று தொட்டு பொருளாதார ரீதியான ஏற்றத் தாழ்வுகள் உருவாகத் தொடங்கிவிட்டன. சொத்துடைமைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம் எனத் தொடர்ந்த சமுதாயப் போக்குகள் மக்களிடையே பொருளாதார அசமந்தநிலையை மேலும் ஆழமாக்கிச் சென்றன. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் கொள்வோன் – கொடுப்போன், ஏழை – பணக்காரன், வள்ளல் – இரப்போன் எனும் வேறுபாடுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன. காலத்தால் முற்பட்ட தமிழ் இலக்கியங்களான சங்க

இலக்கியங்களிலேயே இந்த ஏற்றத் தாழ்வுகள் மிகத் துலாம்பரமாகத் தெரியத் தொடங்கிவிட்டதை அவதானிக்கலாம். இனக்குழு எல்லைக்குள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட புலவர்களும், பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களும் 'பழமரந் தேடும் பறவைகள் போல' வள்ளல்களை நாடிச் சென்றமை பற்றி சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. உற்பத்தியில் நேரடிப் பங்காளிகளாக இல்லாத புலவர்கள், கலைஞர்கள் வாழ்வியலில் உடைமைச் சமுதாயம் ஏற்படுத்திய உடனடி மாற்றத்தினை இங்கு காண்கிறோம். புலவர்கள், கலைஞர்களின் வறுமையையும், வறுமையைக் கரந்து வாழ அவர்கள் முயன்றமையையும், முடியாதபோது வள்ளல்களை நாடிச்சென்று அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றமையையும், தாம்பெற்ற பெருவளத்தினை 'ஓம்பாதுண்டு கூம்பாது வீசிய' வள்ளண்மையையும் சங்க இலக்கியங்களிலே ஆங்காங்கே காண முடிகின்றது. குறிப்பாக ஆற்றுப்படை இலக்கியங்கள் புலவர்களை, கலைஞர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்து விருந்தும், பொருளும் நல்கிய வள்ளல்களைப் பற்றித் தாராளமாகக் குறிப்பிடுகின்றன. வள்ளல்களேயன்றி புலவர்களும் கலைஞர்களும் கடந்து சென்ற வழிகளில் வாழ்ந்த மக்களை தமக்குக் கிடைத்தவற்றைக் கொண்டு விருந்தோம்பி மகிழ்வித்த செய்திகள் ஆற்றுப்படை இலக்கியங்களில் உணர்வு பூர்வமாகச் சுட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

இங்ஙனம் உடைமைச் சமுதாயத்தின் தோற்றத்தால் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஏற்றத் தாழ்வுகளே அறநீதி நூல்கள் விருந்தோம்பல் பற்றிப் பேசத் தூண்டியிருத்தல் வேண்டும். சங்ககாலத்தின் பின்னர் தீவிரமடைந்த உடைமைச் சமுதாயப் பின்னணியில் மேலும் முற்றி முறுகிய ஏற்றத்தாழ்வுகள் விருந்தோம்பல், ஈகை முதலானவற்றை அறநூல்கள் மேலும் தீவிரமாக வலியுறுத்தக் காரணமாகியுள்ளன. சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளை அதற்கான காரணங்களை விளங்கிக் கொண்டு அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் தத்தவ ரீதியான பார்வைகள் வளர்ச்சி கண்டிராத உடைமைச் சமுதாயச் சூழலில் அறநூல்கள் சீர்திருத்தப் பின்னணியில் தங்கள் கோட்பாடுகளை முன்வைத்ததில் வியப்பில்லை. அதன் ஓரங்கமாகவே ஏற்றத்தாழ்வுகளின் விளைபொருளான வறுமை, இல்லாமை என்னும் சமூகக் கொடுமைகளுக்கு ஈகையையும் அதன் பின்னணியில்

விருந்தோம்பலையும் அவை தீர்வாக வலியுறுத்துவதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் வலியுறுத்தப்பட்ட விருந்தோம்பற் பண்பும், மன்னர்கள், குறுநில மன்னர்கள், இனக்குழுத் தலைவர்கள், பழங்குடியினரின் விருந்தோம்பற் சீர்மையும் அறநூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கின்றன.

சங்கமருவிய காலப் பகுதியில் காணப்பட்ட – தெளிவற்றிருக்கும் – களப்பிரர்களின் ஆட்சியும், சங்ககாலத்தின் பிற்பகுதி முதலாக மக்களின் அக, புற வாழ்வில் அவதானிக்கப்பட்டு வந்த சமூகக் குறைபாடுகளும், சங்ககாலத்தில் நிகழ்ந்த தொடர்ச்சியான போர்களின் மோசமான தாக்கங்களும், உடைமை இழப்புக்களும் கூட அறநீதி நூல்கள் எழுந்தகாலப் பகுதியில் விருந்தோம்பலும் ஈகையும் வலியுறுத்தப்படக் காரணமாக அமைந்திருக்கலாம் போலத் தெரிகின்றது. விருந்தோம்பலையும் பகுத்துண்டு வாழ்வதையும் பாரிய மனிதநேயத் தொண்டாக மேற்படி இலக்கியங்கள் விபரிப்பதைப் பார்க்கும்போது அதன் பின்னணியிலுள்ள மேற்படி சமூகக் காரணங்கள் ஓரளவுக்குத் தெளிவாகின்றன. மேலும் சங்ககாலத்தின் பிற்பகுதி முதலாகத் தமிழகத்துக்கு சமண, பௌத்த துறவிகள் தாராளமாக வரத்தொடங்கிவிட்டனர். துறவை வலியுறுத்திய மேற்படி தத்துவங்கள் துறவறத்துக்குத் துணையாக இல்வாழ்வார் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டியிருந்தது. குறிப்பாக, துறவிகளின் துறவற வாழ்க்கை இடையூறின்றிக் கழிய, உணவளித்து காக்கின்றவர்களாக இல்வாழ்வார் இருந்துள்ளனர். இதனால் இல்லறத்தார்க்கு விருந்தின் சிறப்பும், பயனும், எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் சமண – பௌத்த துறவிகள் தாம் போதித்த அறத்தின் ஒரு பகுதியாக விருந்தோம்பலை விபரித்திருக்கலாம் போலத் தெரிகின்றது.

*துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை* *(குறள்: 42)*

எனும் அறநீதிக் கருத்துக்கள் இவ்விடத்தில் பொருத்தி நோக்கத்தக்கனவாகும். விருந்தினர்க்குப் பொருளைக் கொடுப்பதிலும் அவரின் பசிநீங்க உணவளிப்பதே மேலான தருமம் எனக் கூறப்படுகின்றது.

ஏனெனில் தானங்களுள் எல்லாம் சிறந்த தானம் அன்னதானமாகும். அன்னதானத்திலேதான் விருந்தினனுக்கு முழுமையான திருப்தியும், மனநிறைவும் ஏற்படும் என்பார்கள்.

**விருந்தினனும் விருந்தளிப்பவனும்**

விருந்தினருக்கு வேண்டிய தகுதி பற்றியும், விருந்தளிப்பவனுக்கு வேண்டிய பண்புகள் குறித்தும் அறநூல்கள் கூறுகின்றன. துறவிகளேயன்றிப் பிறர், யாசித்து அல்லது இரந்து உண்பது என்பது விரும்பத்தக்கதல்ல (இன்னா: 16) எனும் அறநூல்கள் அவ்வாறு இரந்துண்ண வேண்டிய நிலை விதிவசத்தால் வரின் அருள் இல்லாதவரிடம் செல்லுதல் வேண்டாம் எனக் கூறுகின்றன (திரி.: 10, இன்னா. 21). அருளில்லாதவரிடம் செல்லுதல் என்பது மனக் கிலேசத்துக்கும் துன்பத்துக்குமே காரணமாகும் என அவை வலியுறுத்துகின்றன (இனியவை: 10). அதேபோலவே வறுமையுடைய ஒருவனிடம் மற்றொருவன் விருந்தினனாகப் போவதும் (இனியவை: 06), செல்வந்தன் ஒருவன் வறுமையுடையானிடத்து விருந்தினனாகச் செல்வதும் துன்பத்தையே தரும் எனக் கூறப்படுகின்றது (பழமொழி: 157). வறுமையுடையான்பாற் செலின் அவன் இவர்களுக்கு விருந்தளிக்க முடியவில்லையே என்று மனத் துன்பமடைய வேண்டியேற்படும். துறவோர் வீட்டிலிருந்தும் ஊண் உண்பது துன்பத்துக்குரியதொன்று என அறநூல்கள் வலியுறுத்துகின்றன (இனியவை: 01). மழைக்காலத்தில் விருந்தினராகச் செல்வதும் பொருத்தமற்றது எனக் குறிப்பிடும் திரிகடுகம் அவ்வாறு செல்லும் விருந்தினரை கௌரவிக்க முடியாது வீட்டார் வருந்துவர் என்கிறது (திரி: 76). பிறரிடம் சென்று யாசிப்பவர்கள் குறிப்பாகத் துறவிகள் ஒரு காலத்திலும் கோபிக்கக் கூடாது எனவும் அறநூல்களில் கூறப்படுகின்றது (இன்னா: 39).

விருந்தளிப்பவனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் குறித்தே அறநூல்களில் விலாவாரியாகப் பேசப்பட்டிருத்தலைக் காணமுடிகின்றது. செல்வமுடைமை, முகமலர்ச்சி, இன்சொல்லுடைமை, உயிர்கள் மாட்டு அன்புடைமை, இரக்கம் என்பன விருந்தளிப்போனிடம் இருக்கவேண்டிய தகுதிகளாக அறநூல்களில் விபரிக்கப்பட்டுள்ளது. விருந்தளிப்போன் முதலில் மற்றவர்களுக்கு உணவையோ அல்லது பொருளையோ கொடுக்கத்

தக்க வல்லமை படைத்தவனாக இருக்கவேண்டும். அதாவது பொருளாதார ரீதியான பலம் கொண்டவனாக இருக்க வேண்டும் (இன்னா: 02). அவ்வாறன்றித் தனக்குணவில்லாதவன் பிறர்க்கு உதவிசெய்ய முயல்வதானது நகைப்பிற்குரிய தொன்றாகும் (சிறுபஞ்: 12). பிறருக்கு அள்ளிக் கொடுத்துத் தருமம் செய்ய முடியாதவர்கள் தம்மால் இயன்றதைக் கொடுத்தாற் போதுமானது என்று அறநூல்கள் கூறுகின்றன (இன்னா: 06). ஈத்துவக்கும் இன்பம் பெரிதாகையால் அதனைப் பெற விரும்புவோர் பொருளைத் தேடும் முயற்சியிலீடுபடுதல் சாலச் சிறந்தது (திரி.: 68,90). தாம் பெற்ற செல்வத்தினை தமக்கென வைத்துக் கொள்ளாது அதனைப் பகுத்துண்டு வாழ்வதே நன்மையாகும். அவனையே இவ்வுலகம் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணன் என மதிக்கும் (சிறுபஞ்.: 08). அதிலும் தகுதியுடையாரை இனங்கண்டு அவருக்கு உணவும் பொருளும் அளிப்பதே உண்மையான தருமமாக அமையமுடியும் என அறநூல்கள் விபரிக்கின்றன (இன்னா: 19, நான்மணி: 82).

விருந்தளிப்போனுக்கு இருக்கவேண்டிய அன்புடைமை, முகமலர்ச்சி இன்சொல்லுடைமை என்பனபற்றி அறநூல்களில் விரிவான தகவல்கள் உண்டு. திருக்குறளின் அதிகார வைப்புமுறை பற்றிப் பேசும் பரிமேலழகர் அன்புடைமை, இன்சொல்லுடைமை என்பவற்றுக்கிடையே விருந்தோம்பல் என்ற அதிகாரம் வைக்கப்பட்டமைக்கான காரணம் விருந்தோம்புகின்றவனுக்கு இப் பண்புகள் அவசியம் வேண்டப்படுகின்றன என்பதனாலாகும் எனக் குறிப்பிடுகின்றார். அன்பிலாதவரிடத்தில் சென்ற விருந்தினர் வாடுவர் என நான்மணிக்கடிகையாசிரியர் கூறுகின்றார் (நான்மணி.: 47). அன்பும் இன்சொல்லும் உடையார் மாட்டு இன்முகம் என்றும் இருக்கும். அந்த இன்முகக் குறிப்பொன்றே விருந்தினனின் பாதிப் பசியையும் களைப்பையும் தீர்த்துவிடும் என்பார்கள். அதனாலே தான் வள்ளுவர்,

*மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து (குறள்: 90)*

எனக் கூறிச்சென்றார். சிறுபஞ்சமும் விருந்தினனிடம் விருந்தோம்புவோனுக்கு இருக்க வேண்டிய கண்ணோட்டம் பற்றி

விபரிக்கின்றது (சிறுபஞ்.: 52). தன்னை நாடிவந்தார்க்கு கைப்பிடி அளவுள்ள அல்லது உண்டோ இல்லையோ என ஐயுறும்படியாக விரலிறையுள் அடங்கும் பிச்சைச் சோற்றினையோ கூழையோ கொடுத்தாலும் அதன் பயன் மிகுதியானது என அந்நூல் மேலும் விபரிக்கின்றது. அதாவது இரவலரைக் கண்டு மனமிரங்கி ஒருவன் சிறு பொருளைக் கொடுத்தாலும் அதனால் வரும் பயன் குன்று போலப் பெரியதாய்க் கூடும் என்பது இதனாற் புலனாகின்றது (சிறுபஞ்.: 64,65). ஆசாரக்கோவை புன்முறுவலோடு இனியசொற்களைக் கூறி வரவேற்றல், கால் கழுவ நீரளித்தல், அமர்வதற்குப் பாயை அளித்தல், படுக்கப் பாயைத் தருதல், தங்க இடம் கொடுத்தல் என்பனவற்றையும் விருந்தோம்புவோர் செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது (ஆசார: 54). மேலும் விருந்தினர் உணவுண்ணும்போது விருந்தளிப்போர் உயர்பீடங்களிலே அமரக்கூடாது என்றும் (ஆசார: 40) விருந்தைச் சிறப்பிப்பன உருக்கு நெய்யும் கட்டித் தயிருமாகலின் கன்றோடு கூடிய பசுவினை உடையானது விருந்து மிக இனிது என்றும் (இன்னா: 38) அறநூல்கள் சுட்டுவதைக் காணலாம். நான்மணிக்கடிகை விருந்தினர்க்கு உண்கலம் வைத்து விருந்தளித்தால் அவர்கள் மிக மகிழ்வர் எனக் குறிப்பிடுகின்றது (நாண்மணி: 63). இல்லறவாழ்வில் இல்லாளின் பெரும் பணி தனது கணவன் செய்கின்ற விருந்தோம்பலுக்கு உறுதுணையாக இருப்பதாகும் என்கிறது திரிகடுகம் (திரி: 64).

**இம்மையும் மறுமையும்**

இம்மைப் பயன்களையும் மறுமைப் பயன்களையும் ஒருங்கே தரவல்ல உயர்ந்த அறமாக விருந்தோம்பலை அறநூல்கள் குறிப்பிடுகின்றன. தன்னை நாடி வந்தவனுக்கு உணவோ பொருளோ கொடுத்து அதனைப் பெற்றதால் அவன் முகத்தில் ஏற்படும் மகிழ்ச்சி ஒன்றைக் காண்பதே வள்ளல் ஒருவனுக்கு உவப்பான பயன் எனக் கூறப்படுகின்றது (குறள்: 228). அதற்காக விருந்தினர்க்குக் பொருளையும் உணவையும் கொடுக்கின்றவன் ஒருகாலத்திலும் வறுமைப்பட மாட்டான்; அவன் செல்வம் எப்போதும் பெருகிக்கொண்டேயிருக்கும். வள்ளலிடத்துள்ள செல்வம் வயிரம் பாய்ந்த மரத்துக்கு ஒப்பாகும் என திரிகடுகம் கூறுகின்றது (திரி.: 75). வள்ளுவரும்,

*வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*
*பருவந்து பாழ்படுத லின்று* (குறள்: 83)

என்றும்

*அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து*
*நல்விருந்து ஓம்புவா னில்* (குறள்: 84)

என்றும்

*வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்* (குறள்: 85)

என்றும்

*பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்*
*தீப்பிணி தீண்ட லரிது* (குறள் 227)

என்றும் கூறியிருத்தல் காண்க. செல்வம் ஒருவனிடம் எப்போதும் நிலைத்து நிற்பதில்லை; இதனால் ஒருவனிடம் செல்வம் உள்ள காலத்திலேயே உயர்ந்த அறங்களைச் செய்து, நிலையான பயன்களைத் தேடிக் கொள்ள வேண்டும் எனச் சொல்லப்படுகின்றது (நாலடி: 93). அதிலும் வறியோரின் பசியைத் தீர்த்துத் தேடிக் கொள்ளும் பயனே வள்ளல் தன் செல்வத்தை அழியாமல் பாதுகாக்கக் கூடிய கருவூலம் என்கிறார் வள்ளுவர் (குறள்: 226).

சிறுபஞ்சமூலம் பஞ்ச காலத்தில் பலர்க்கும் பகிர்ந்தளித்து உண்பவன்; தன்னிடத்துப் பொருளை வீணாக யாருக்கும் பயன்படாமல் காத்துக் கொண்டிருக்காது பிறர்க்கு கொடுத்து உதவுபவன்; தானுண்பதைப் பிறர்க்கு ஈந்து உண்பவன்; பசித்த குழந்தைக்கு உணவளிப்பவன் ஆகிய இவ்வைவரும் எண்பது வயதுக்கு மேல் நீண்ட காலம் சுகமாக வாழ்வார்கள் எனக் குறிப்பிடுகின்றது (சிறுபஞ்: 79). மேலும் சிறந்த துறவறத்தாருக்குச் சமைத்துப் பகிர்ந்துண்டு மிகவும் இனிதாக முற்பிறப்பில் வாழ்ந்தவர்களே இப் பிறப்பில் சமைத்துப் பலரோடு பகிர்ந்துண்டு பிறர் போற்ற வாழ்வார்கள் எனக் குறிப்பிடுகின்றது (சிறுபஞ்: 93). முதுமொழிக்காஞ்சி பகுத்துண்டு வாழ்வான் இவ்வுலகில் தன் புகழை நிலைநிறுத்துவான் என்கின்றது. ஏலாதி இரவிலும் வருந்தி முயன்று பொருளீட்டி உணவுகளைச் சமைத்து அளித்தவர் பலவகையான யானைகளையுடைய அரசர்களாய் மதிக்கப்பட்டு மனைவி மக்களுடன் கூடி இன்சுவை உணவுகளை மகிழ்வுடன் ஒருசேர உண்டு

வாழ்வர் எனப் புகழ்கின்றது (ஏலாதி: 52). மேலும் யார்யாரையெல்லாம் இல்வாழ்வான் விருந்தோம்பிப் பாதுகாக்க வேண்டும் எனக் கூறிவிட்டு அங்ஙனம் விருந்தோம்புவோர் இவ்வுலகத்தில் சுற்றத்தினருடன் கூடி அளவளாவி மகிழ்ச்சியோடு வாழ்வார்கள் (ஏலாதி: 53) என்றும் உலகத்தை ஆண்டு செல்வம் தம்மைச் சூழ்ந்திருக்க இன்பத்துடன் வாழ்வார்கள் (ஏலாதி.55) என்றும் மன்னவராய் யாவராலும் போற்றப்படும் படி பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆண்டு வருவார்கள் என்றும் (ஏலாதி: 42, 44, 45, 56, 57) பெருந்தவத்தினர்க்கு உணவு கொடுத்தவன் சுறாமீன் போன்று அமைக்கப்பட்ட தோரண வாயிலையுடைய மாளிகையில் வாழ்வான் (ஏலாதி: 43) என்றும் ஏலாதி சுட்டுகின்றது.

விருந்தோம்புவோர் அடையத் தக்க இம்மைப் பயன்கள் பற்றி விரிவாகப் பேசிய அறநூல்கள் அதனால் ஏற்படும் மறுமைப் பயன்குறித்து மிகவும் சிக்கனமாகவே பேசியிருக்கின்றன. இம்மைப் பயன்கள் இலகுவில் ஒருவரால் உணரத்தக்கனவாக இருப்பதாலும் மறுமைப் பயன்கள் புலன்களால் அறியமுடியாதனவாக இருப்பதாலும் ஒருவேளை அறநூல்கள் அவைபற்றி விரிவாகக் கூறுவதைத் தவிர்த்திருக்கலாம் போலத் தெரிகின்றது. எனினும் நாலடியாரும் வள்ளுவமும் விருந்தோம்பலின் மறுமைப் பயன்கள் குறித்த தகவல்களைத் தருகின்றன. விருந்தோம்பலின் மறுமைப் பயன் சுவர்க்கப் பதவியே என அவை உறுதிபடக் கூறுவதைக் காணலாம். நாலடியார் 'கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு அடையாவாம் மாண்டைக் கதவு' என்கின்றது (நாலடி: 91). சுவர்க்கத்தின் பாதைகள் விருந்தோம்புவோர்க்கு எப்போதும் திறந்தேயிருக்கும் என்பது இதனாற் தெளிவாகின்றது. வாரிக்கொடுத்த செல்வர்க்கேயல்லாமல் சிறிய தருமத்தினைச் செய்தவர்க்கும்கூட இச் சுவர்க்கப் பதவி சாத்தியமாகும் என்கிறது நாலடியார் (நாலாடி: 272). வள்ளுவர் இதற்கும் ஒருபடி மேற்சென்று,

*செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்போன்*
*நல்விருந்து வானத் தவர்க்கு* *(குறள்: 86)*

எனக் குறிப்பிடுகின்றார். விருந்தோம்பலின் சிறப்பு தேவர்களாலேயே கௌரவிக்கப்படும் சிறப்பினைப் பெறுவதாகும் என்பது இதன் பொருள். ஆக

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும், பயன்களை வாரித்தரவல்ல ஓர் அறமாக விருந்தோம்பலை அறநூல்கள் விதந்துரைத்துள்ளதைக் காணலாம். விருந்தோம்பலினால் கிடைக்கக் கூடிய பயன்கள் இத்துணை என வரையறுக்க முடியாது எனச் சுட்டும் வள்ளுவர் விருந்தோம்பல் குறித்த ஓர் எச்சரிக்கையினையும் செய்திருக்கின்றார். விருந்தோம்பல் தகுதியானவரிடத்தில் செய்யப்படவேண்டும் என்பதே அதுவாகும் (குறள்: 87). பாத்திரமறிந்து செய்யப்பட்ட விருந்தோம்பலினாலேயே பயன் உண்டு என்கிறார் வள்ளுவர். ஒருவர் செய்யும் விருந்தின் பயனை அளந்தறியக் கூடிய கருவி அவர் யாருக்கு விருந்தினைச் செய்கின்றார் என்பதேயாகும். இதனையே நாலடியாரும் வறியார்க்குக் கொடுத்தலே கொடையாகும்; செல்வர்க்குக் கொடுப்பது கடனாகும் எனச் சுட்டுகின்றது (நாலடி:98).

**இவறண்மை**

விருந்தினரை அவமதிப்பதால் ஏற்படக் கூடிய தீமைகள் குறித்தும் அறநூல்களின் விரிவான கருத்துக்கள் உள. திரிகடுகம் விருந்தினர் இல்லாமல் தனித்து உண்ட பகற்பொழுது மனத்திண்மையுடையார்க்கு நினைக்கும் தோறும் நோயாம் என்றும், இரப்பவர்க்கு இல்லையென்று அன்பின்றி மறைப்பவன் நரகத்தில் சென்று வீழ்வான் என்றும் கூறுகின்றது. (திரி:44,45). முதுமொழிக்காஞ்சி ஈயாத கையுடையான் புகழ்மாலை உடையவன் ஆகான் எனச் சுட்டுகின்றது (முதுமொழி.180). இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலாகச் சென்று நாலடியார் கொடுத்து உண்ணாதார் சுடுகாட்டில் இருக்கும் ஆண்பனைக்கு ஒப்பாவார் என்கின்றது (நாலடி:96). ஆண்பனை காய்ப்பதில்லை; அதனால் பயனற்றது; அதுவும் சுடுகாட்டில் நிற்குமெனின் அதனை எவருமே திரும்பிப் பாரார் எனும் பொருள் தொனிக்கும் வகையில் இவறண்மையை நாலடியார் கடிந்திருக்கும் நயம் படித்தின்புறத்தக்கதாகும். மேலும் பிறருக்கு கொடுத்து வாழாதவர்களுக்குச் சுவர்க்கக் கதவுகள் எப்போதும் மூடப்பட்டிருக்கும் என்றும் (நாலடி: 271), தானும் உண்ணாமல் துறவோருக்கும் கொடாமல் பொருளைத் தேடிவைத்த லோபியை அப்பொருளும் சிரிக்கும் உலகமும் கண்டு நகைக்கும் என்றும் (நாலடி: 273), வீட்டிற் பிறந்த பெண்ணை அயலான் அநுபவிப்பது போல கொடாதவன் பொருளைப் பிறன் அநுபவிப்பான் என்றும் (நாலடி.:274), கொடாத செல்வர்களைப் பார்க்கிலும்

தரித்திரர் பலமுறையாலும் பிழைத்தவர்கள் என்றும் (நாலடி.: 277) நாலடியார் விருந்தோம்பாதோரைப் பலவாறு சாடியிருப்பதைக் காணலாம். திருவள்ளுவரும்,

*உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா*
*மடமை மடவார்கண் உண்டு (குறள்: 89)*

என இவறண்மையைச் சுட்டிக்காட்டியிருத்தல் நோக்கத்தக்கது. விருந்தோம்பி வேளாண்மை செய்யாத இல்வாழ்வோரைப் 'பேதையர்' என வள்ளுவர் இங்கு குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

இவற்றால் விருந்தோம்பி வாழும் வாழ்க்கையே அர்த்தமுடையது என்றும் வையத்துள் வாழ்வாங்கு வாழவிரும்புவோர் விருந்தோம்பலை விடாது பேணிவர வேண்டும் என்றும் அறநூல்கள் குறிப்பிடுவது தெரிகின்றது. இங்ஙனம் விருந்தோம்பும் அறத்திணைத் துறவறத்துடன் ஒப்பிட்டு பார்க்கும் வள்ளுவர்,

*ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை*
*மாற்றுவார் ஆற்றலின் பின் (குறள்: 225)*

எனக் கூறியிருப்பதை நோக்குகின்றபோது விருந்தோம்பலின் முக்கியத்துவம் மேலும் தெளிவாகின்றது. இவற்றுகெல்லாம் மேலாக விருந்தோம்பலின் சிறப்பினை முத்தாய்ப்பு வைத்தாற்போல்,

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (குறள்: 322)*

என்று வள்ளுவர் கூறியிருத்தலைக் காணும் போது அறங்களுக்குள் எல்லாம் பேரறமாகக் கருதத்தக்க முக்கியத்துவத்தினை விருந்தோம்பல் பெற்றிருந்தமை தெரிகின்றது. தமிழர் பண்பாட்டில் ஊறிப்போன ஓர் அம்சமாகவும், ஒரு சமூகத் தேவையாகவும் விளங்கிய விருந்தோம்பலை

அறநூல்கள் வரையறுத்து, ஒழுங்குபடுத்தியுள்ளன; அதனைப் பிற்காலச் சமூகத்துக்கு ஆவணப்படுத்தியும் தந்துள்ளன.

## உசாத்துணை


1. சிதம்பரனார், சாமி., பதினென் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், அறிவுப் பதிப்பகம், சென்னை, 2003.
2. நான்மணிக்கடிகை மூலமும் பழையவுரையும், (பாதி.) மாதவன், இரா., தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (2001).
3. பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1956.
4. பதினெண் கீழ்க்கணக்குத் தெளிவுரை, (பதி.) சண்முகப்பிள்ளை, மு., முல்லை நிலையம், சென்னை, 2003.
5. பொன்னுச்சாமி., மு., தமிழ் நீதி இலக்கிய வரலாறு, இந்து பதிப்பகம், கோயம்புத்தூர் – 2003
6. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரிபுத்தகப் பண்ணை, சென்னை, 1985.
7. சந்திரசேகரன். இரா. சரவணன், ப., நலடியாரில் அறவாழ்வு, சீதை பதிப்பகம், சென்னை, 2007.